நபர்கள் பற்றிய பிரச்சினை இல்லை. பர்மனென்ட்டாக, ரெகுளராக நடக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் போலீஸ் துறையினுடைய உதவியையும் நாடி ஒரு சீரியஸ் இன்வெஸ்டிகேஷன் நடத்தி அந்த net work and racket உடைப்பதற்கான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பரிதாபகரமான முறையிலே தங்களுக்குக் கடிதங்கள் வருவதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய கடிதங்களை என்னிடத்திலே தருவார்களேயானால் உடனடியாகத் தேவையான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குமரி மாவட்டம், வாளேற்றிவயல் பள்ளி.

**வினா எண் 562**—**திரு. டி. மணி** : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பழங்குடி மக்களுக்கு வாளேற்றி வயல் என்னுமிடத்தில் கட்டியிருக்கும் பள்ளிக்கூடத்திற்கு போதுமான ஆசிரியர்கள், இருக்கைகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி** : (அ) மற்றும் (ஆ) இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தேவையான விவரங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் நல இயக்குநர், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் கேட்கப்பட்டுள்ளன. அவை இன்னமும் முழுமையாக வந்து சேரவில்லை. விவரங்கள் கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. மணி** : பேரவைத் தலைவர் அவர்களே, வாளேற்றி வயலில் மட்டுமல்ல, அந்த மாவட்டத்தில் இருக்கிற நூறாம்மயில், பத்துகாணி, மூக்கறக்கல் போன்ற இடங்களில் பழங்குடி மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலுள்ள பள்ளிகளில் பொதுவாக அந்த நிலை தான் தொடர்ந்து இருக்கிறது. ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே, அந்தத் துறை சம்பந்தமான அதிகாரிகளிடத்திலே, அது சம்பந்தமான மகஜர்களை, மனுக்களை நேரிடையாகக் கொடுத்து, பேசி, பல மாதங்களாகியும், இன்னும் வாளேற்றிவயல், நூறாம்மயில், மூக்கறக்கல் போன்ற இடங்களில் இருக்கிற பள்ளிகளில் அந்தத் தரைகூடச் செம்மைப் படுத்தப்படாமல் இருக்கிறது. ஏராளமான நிதி அந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் இன்னும் அந்தப் பணியைச் செய்யாததன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 30]

காரணம் என்ன? அவசரமாக அந்தப் பணிகளைச் செய்து போதுமான ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கும் மாணவர்களுக்கு போதுமான இருக்கைகளுக்கும் ஏற்பாடு செய்வதோடு ஆசிரியர்கள் அமர்வதற்குக் கூட தேவையான சேர் இல்லாத காரணத்தால், பல ஆசிரியர்கள் அங்கே நியமனம் செய்யப்பட்டால் கூட, போகாத நிலைமைகள் அங்கே இருந்துகொண்டிருக்கின்றன. இக்குறைகளை அகற்ற அவசரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியைப் பொறுத்த வரையில் இருக்கை வசதியில்லையென்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அதுகுறித்தும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, உடனடியாக அரசு அதில் தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து சரியான தகவல் வரவில்லையென்று சொன்னார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவரை பொறுத்தமட்டில் இது நீண்ட காலத்திற்கு முன்னாலே தகவல் தராமல் இருப்பதற்குப் பிரத்தியேகமான காரணங்கள், அந்தப் பகுதி மக்களை ஒதுக்குகின்ற எண்ணம் ஏதாகிலும் அவர்களுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் பழங்குடி மக்கள் சம்பந்தமான பள்ளிக்கூடங்களைப் பொறுத்த அளவில், பொதுவாக இந்த நிலைமைதானிருக்கிறது என்ற காரணத்தினாலே. குறிப்பாக ஒரு முக்கியப் பள்ளிக்கூடமான பேச்சிப்பாறையிலே போதுமான ஆசிரியர்கள் கிடையாது. மாணவர்கள் இருந்து படிக்கப் போதுமான வசதி கிடையாது. ஆசிரியர்களுக்குத் காலாகாலத்திலேயே ஊதியம் கொடுக்கபபடவில்லை. கிரேப்ட்ஸ் இன்ஸ்ட்ரக்டர் போன்றவர்களுக்குப் பல மாதங்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. அதே போல், அங்கே, கட்டவேண்டிய ஹாஸ்டல்களுக்குப் போன ஆண்டே நிதி ஒதுக்கியும் இன்னும் கட்டப்படவில்லை. அப்படிப்பட்ட உதாசீனமான போக்கு அந்த மாவட்டத்திலே இருக்கிறது. அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய அதிகாரிகள் மேலே அந்த விஷயத்திலே தகுந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா?